**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10042026-10712

Volume: 10

Issue: 4

Month: April

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.02.2026

Accepted: 20.03.2026

Published: 01.04.2026

Citation:
Puvitha, R. "Sangapengalin Vazhviyal Nokkil Ingurunooru." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 4, 2026, pp. 16–22.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i4.10712

*Corresponding Author:
puvitha.dacc@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Sangapengalin Vazhviyal Nokkil Ingurunooru

**R. Puvitha**
*Assistant Professor in Tamil*
*K.S.Rangasamy College of Arts and Science (Autonomous), Tiruchengode*
*http://orcid.org/0009-0002-1999-6541*

**Abstract**

*Society is a collection of individuals. In this way, the well-being, lifestyle, and morality of individuals become the identity of society. The role of women in contributing to the welfare of society is particularly significant. Through the homes where women with excellent qualities live—as mothers, daughters, sisters, lovers, and wives—the family, and through the family, society, and through society, the nation, gain prestige. In the Ainkurunuru, we see how such exceptional women lived, forgetting their own joys and sorrows for the sake of those around them, and how they lived with concern for the country and its resources. The woman is depicted as one who has immense love for her husband, who cannot tolerate separation even for a moment, and who considers even a husband who forgets her and goes to another woman as a divine being. It is noteworthy that the mental struggles and patience of such a heroine are revealed in the poems of Ainkurunuru.*

***Keywords:*** *Virtue, Safeguarding Well-being, Sacrifice, Contentment, Family Life, Patience, Uncompromising Stance, Teaching Morality.*

**References**

1. Sangam Literatures (Ettuthogai, Pathupattu) - Text and Commentary, Varthamanan Pathippagam, Thyagaraya Nagar, Chennai.
2. Thirukkural, Parimelalhagar Commentary, Saradha Pathippagam, Chennai.
3. Heroine in Agapporul Poems, E.Go.Bhaskaradas, University Publishers Cooperative, Thiruvanelveli, Indiana.
4. Tholkappiyam - Porulathigaram, Ilampuranar Commentary, Saradha Pathippagam, Chennai - 2006.

# சங்கப்பெண்களின் வாழ்வியல் நோக்கில் ஐங்குறுநூறு

***இரா. புவிதா***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கே. எஸ். ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்செங்கோடு

***ஆய்வுச்சுருக்கம்***

*தனிமனிதர்களின் கூட்டமே சமுதாயம் ஆகும். அவ்வகையில் தனிமனித நலனும் வாழ்க்கை முறையும், ஒழுக்கமும் சமுதாயத்தின் அடையாளமாக மாறுகின்றன. சமுதாயத்தின் நலனுக்கு ஒவ்வொரு மனிதனும் காரணமாக இருப்பதில் பெண்களுக்குரிய பங்கு தனிச்சிறப்பு மிக்கதாகும். தாயாக, மகளாக, சகோதரியாக, காதலியாக, மனைவியாக சிறந்த குணங்களைக் கொண்ட பெண்கள் வாழும் இல்லத்தால் குடும்பமும், குடும்பத்தால் சமூகமும் சமூகத்தினால் நாடும் பெருமை பெறுகிறது. அத்தகைய சிறப்பு மிக்க பெண்கள் இன்ப துன்பங்கள் அனைத்தையும் மறந்து தன்னைச் சார்ந்தவர்களின் நலனுக்காக வாழ்ந்தமையினையும், நாட்டின் மீதும் நாட்டு வளத்தின் மீதும் அக்கறைகொண்டு வாழ்ந்தமையினையும் ஐங்குறுநூற்றில் காண முடிகின்றது. தலைவன் மீது அதீத அன்பு மிக்கவளாகவும், பிரிவைச் சிறிதளவும் ஏற்றுக்கொள்ள இயலாதவளாகவும், தன்னை மறந்து பரத்தையிடம் சென்று வரும் கணவனைக்கூடத் தெய்வமாக எண்ணி வாழ்பவளாகவும் பெண் சுட்டப்பட்டுள்ளாள். அத்தகைய தலைவியின் மனப்போராட்டங்களும் பொறுமைத் திறனும் ஐங்குறுநூற்றுப் பாடல்களில் வெளிப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.*

***திறவுச் சொற்கள்:*** *நற்பண்பு, நலன் காத்தல், மனநிறைவு, இல்லறம், பொறுமை, விட்டுக் கொடுக்காமை, அறம் கற்பித்தல், ஐங்குறுநூறு*

## முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் சங்க இலக்கிய நூல்களான எட்டுத்தொகையும் பத்துப் பாட்டும் தமிழர்களின் வாழ்வியலைப் பிரதிபலிப்பதில் தனிச்சிறப்பு பெற்று விளங்குகின்றன. சங்ககால மக்களின் பழக்கவழக்கங்கள், தொழில்கள் குறித்து மட்டுமின்றி, மக்களின் மனப்பாங்கினை அறிவதற்கும் இந்நூல்கள் ஆதாரமாய் விளங்குகின்றன. மக்களிடையே உள்ள காதல், வீரம், கொடை மட்டுமின்றி, தனிமனித எண்ணங்களும் இந்நூலில் பிரதிபலிக்கின்றன. குறைந்த அடியெல்லைகளில் மக்களின் அகவாழ்க்கைச் செய்திகளை உணர்த்தும் ஐங்குறுநூறு பாடல்களில் வெளிப்படும் பெண்கள் சார்ந்த செய்திகள் குறித்து இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

## ஐங்குறுநூற்றில் பெண்கள்

சங்க இலக்கிய அகநூல்களில் தலைவி, தோழி, செவிலி, நற்றாய், பரத்தை, பாங்கி, காமக்கிழத்தி, காதற்பரத்தை போன்ற பெண்பாற்சொற்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பெண்ணும் பிறப்பால் ஒன்றுபட்டிருந்தாலும் அவர்களின் வாழ்க்கை முறையும் மன உணர்வுகளும் வேறுபட்டுள்ளன. பெண்களிடம் இருக்க வேண்டிய பண்புகளைத் தொல்காப்பியர்,

> **“கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
> **மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
> **விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
> **பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்”**
> ***(தொல்.நூற்பா.1098)***

என வரையறை செய்துள்ளார்.

சங்க காலப் பெண்கள் பொறுப்புகள் மிக்கவர்களாகவும் வீரமிக்கவர்களாகவும் வாழ்ந்து வந்தனர். சமூகத்தினை ஆண்களும் இல்லத்தினைப் பெண்களும் தலைமையேற்று நடத்தி வந்தனர். எனவேதான் திருமணத்திற்குப் பின் பெண்கள் இல்லாள், மனையாள் எனச் சுட்டப்படுகின்றனர். இதற்கு இல்லத்தினை ஆள்பவள், மனையை ஆள்பவள் என்று பொருள். இவ்வாறு ஆண்களை 'இல்லான்' எனச் சுட்டினால், அது பொருள் இல்லாதவனைச் சுட்டுவதாகவே அமையும். பண்டைய காலத் தமிழ்ச் சமூகம் பெண்களுக்கு அளித்த சிறப்பினை உணர்வதற்கு இச்சொல்லே சான்றாக அமைகிறது. இச்சிறப்புகள் யாவும் பெண்களின்பண்பிற்கும்கற்புடைமைக்கும் அளிக்கப்பட்ட அங்கீகாரம் ஆகும்.

## தோழியின் நிலை

சங்க காலத்தில் பெண்கள், ஆண்களுக்கு நிகரான உரிமை பெறாவிட்டாலும் அவர்கள் அடிமைப்படுத்தப்படவில்லை என்பதனை ஐங்குறுநூற்றில் காணமுடிகின்றது. பெண்கள் தங்களுக்கென சில கட்டுப்பாடுகளையும் விதிகளையும் வகுத்துக்கொண்டு வாழ்ந்தனர். பெண்களுக்குப் பேச்சுரிமை மறுக்கப்படாதபோதும் அச்சம், மடம், நாணம் போன்ற பண்புகளால் ஆண்கள் முன் நின்று பேசுவது தவறு எனக் கருதினர். ஆனால் தோழியும் செவிலியும் இத்தகைய நிலைக்கு விதிவிலக்காக வாழ்ந்தனர். தலைவியின் மனநிலையினைத் தலைவன் முன்பு எடுத்துரைப்பவளாகத் தோழியே விளங்குகின்றாள். தலைவியின் விருப்பம், துயரம், அச்சம் போன்ற அனைத்தினையும் தோழியின் மூலமாகவே தலைவன் அறிந்து கொள்கின்றான். மேலும் தலைவியை விரைவில் மணந்து கொள்ளுமாறு தலைவனை வற்புறுத்துவது முதல் தலைவனின் தவறைச் சுட்டிக்காட்டி அவனை இடித்துரைப்பது வரை தோழியின் பங்கு முதன்மையானதாக அமைகின்றது.

தலைவன் தான் திரும்பி வருவதாகக் கூறிச் சென்ற காலம் வந்தும் வாராமை கண்ட தோழி, தலைவன் தன்னுடைய உறுதிமொழியில் பொய்த்தமையைச் சுட்டிக் காட்டுவதனை,

**"பொய்படு கிளவி நாணலும்**
**எய்யார் ஆகுதல், நோகோ யானே?"**
***(ஐங்குறுநூறு.472:4-5)***

எனும் ஐங்குறுநூற்று அடிகள் உணர்த்துவது குறிப்பிடத்தக்கது.

சங்க காலத்தில் தலைவன் திருமணத்திற்கு முன்பு பொருள் தேடிச் சென்று வர வேண்டும் என்ற நியதி இருந்தமைக்கு சங்க இலக்கியங்களே ஆதாரமாய் விளங்குகின்றன. களவில் தலைவியைச் சந்தித்து மகிழும் தலைவன், வரைவு நீட்டிக்கும்போது தலைவியின் கற்பு நிலையினை எண்ணி செயல்பட வேண்டிய பொறுப்பு தோழிக்கு உரியதாகின்றது. தலைவிக்கு ஊரார் மூலம் அலர் ஏற்படாமல் காப்பதற்காகத் தலைவனை வரைவுக்கு வற்புறுத்துகின்றாள் தோழி. தலைவன் வரைவுக்கு உடன்பட்டு பொருள் தேடி வந்த பின்னரே தன் வீட்டாருக்குத் தலைவியின் காதலை எடுத்துரைக்கின்றாள்.

தலைவியை மணம் முடிப்பதற்காகப் பொருள் தேடிச் சென்ற தலைமகன், பொருளுடன் தேரில் வருகின்றான். இதனைத் தோழி, 'செல்வன் அஃது ஊரே' என்று, அவனுடைய ஊர் செல்வச்செழிப்பு மிக்கது, ஆகையால் தலைவியை அவனுக்கு மணம் முடித்து அனுப்பலாம் எனச் செவிலிக்கு குறிப்பால் உணர்த்துகின்றாள். அவ்வாறு திருமணம் முடிக்காவிட்டால் ஊரார் பழித் தூற்றுவர் என்பதனைச் செவிலிக்கு எடுத்துரைத்து, தலைவியின் கற்புத்திறத்தினைக் காக்கும் கடமையும் தோழிக்கு உரியதாகின்றது. தலைவியானவள் தலைவனைத் தவிர வேறு யாரையும் சிந்திக்காதவள், அவள் தலைவனைத் தனக்குரியவனாக எண்ணி வாழ்கின்றாள்

என்பதை வெளிப்படுத்தும் விதமாய், "புக்கெழு துறைவனை "என்னை" என்றும்" என உரைக்கின்றாள் தோழி. இவ்வாறாக, தலைவன் மீது களவுமணம் கொண்ட தலைவி, அவனையே மணம் முடித்து கற்பு வாழ்க்கை பெற தோழியே உறுதுணையாக விளங்குகின்றாள்.

***"தண்துறை ஊரன் வரைக!***
***எந்தையும் கொடுக்க! எனவேட் டேமே"***
***(ஐங்குறுநூறு.6:5-6)***

எனும் அடிகள், பெற்றோர் சம்மதத்துடன் தலைவன் தலைவியின் திருமணம் நடக்க வேண்டுமெனத் தோழி விரும்புவதனை வெளிப்படுத்துகின்றது.

அதுபோல, தலைவியை வழிநடத்து பவளாகவும், தலைவி வருந்தும் காலத்தில் அவளுக்கு நற்கருத்துகள் கூறித் தேற்றுபவளாகவும் விளங்கும் தோழியின் பண்பு சிறப்புமிக்கதாகும். தலைவன் போர் முடிந்தும் திரும்பி வராததால் வருத்தமுற்ற தலைவிக்கு, தலைவன் அவளுக்காக அணி கலன்களைக் கொண்டு வருவதற்காகவே காலம் தாழ்த்துகின்றான் எனக் கூறித் தேற்றுவதனை,

***"நாடுபடு நன்கலம் தரீஇயர்,***
***நீடினர் தோழி!நம் காத லோரே"***
***(ஐங்குறுநூறு.472:4-5)***

எனும் அடிகளில் காண முடிகின்றது.

சங்க காலத்தில் ஆண்கள் பரத்தையரிடம் சென்று வருவது இயல்பான நிகழ்வாக அமைந்திருந்தது. தலைவனுக்குரிய பிரிவுகளில் பரத்தையர் பிரிவும் ஒன்றாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய பண்பு சான்றோரால் தவறு என எடுத்துரைக்கப்பட்டாலும், அதற்கான தண்டனைகள் எதுவும் அளிக்கப்படவில்லை என்பதே உண்மை. தலைவியும் ஊடல்கொள்கிறாளே ஒழிய, அவனைத் தாழ்த்திப் பேசவோ, பிரிந்து செல்லவோ இல்லை. பரத்தையிடம் சென்றுவந்த தலைவனைஇடித்துரைப்பவளாகவும்அவனது தவறையும் தலைவியின் நிலையினையும் எடுத்துரைப்பவளாகவும் விளங்கும் தோழியின் பண்பினை ஐங்குறுநூற்றில் காண முடிகின்றது.

***"தீம்பெரும் பொய்கை யாமைஇளம் பார்ப்புத்***
***தாய்முகம் நோக்கி வளர்ந்திசி னாஅங்கு***
***அதுவே ஐயநின் மார்பே:***
***அறிந்தனை ஒழுகுமதி: அறனுமார் அதுவே"***
***(ஐங்குறுநூறு.472:4-5)***

எனும் அடிகளில் நீர்நிலைகளில் உள்ள ஆமையின் இளம்குட்டிகள் தாயின் முகம் பார்த்து வளர்வதைப் போன்று, தலைவியும் தலைவனை நோக்கியே உள்ளாள் என்பதை எடுத்துரைக்கும் விதமாக தோழியின் கூற்று அமைந்துள்ளது.

தோழியின் மனநிலையானது எல்லா நேரத்திலும் தலைவியைக் குறித்தே சிந்திப்பதாக அமைந்துள்ளது. தலைவனுக்கு அறிவுரை கூறும் தோழியின் இயல்பு, அக்காலப் பெண்கள் அறிவுமிக்கவர்களாகவும், எதனையும் சிந்தித்து செயலாற்றும் பண்பு மிக்கவர்களாகவும் இருந்தமைக்குச் சான்றாக உள்ளது. தலைவனும் தோழியின் வார்த்தைகளுக்கு மறுவார்த்தை சொல்லாதவனாய் ஏற்று நடப்பதன் மூலம் பெண்களின் நல்வார்த்தைக்கு மதிப்பளிக்கப்பட்டமையை உணர முடிகின்றது.

**செவிலியின் மனநிலை**

தலைவியின் தாயான நற்றாயைவிடத் தலைவியின் அனைத்து செயல்பாடுகளிலும் ஈடுபாடு மிக்கவளாக செவிலியே விளங்குகின்றாள். தலைவன்மீது காதல் கொண்ட தலைவியின் உடல் மாறுபாடு அறிந்து அவளைக் குறித்து அறிய முற்படுவது முதல் அவளின் இல்லறவாழ்க்கை நிறைவாக உள்ளதா என அறிந்து, அதனை நற்றாயிடம் உரைப்பது வரை செவிலியின் பங்கே அதிகமாக உள்ளது.

உடன்போக்கு சென்ற தலைவியின் நிலையை எண்ணி வருந்தி அவளைப் பின் தொடர்ந்து செல்லும் செவிலி, வழியில் கண்டோர் அனைவரிடமும் தன்னுடைய

மகள் குறித்து வினவுகின்றாள். பாலை நிலத்தைக் கடக்கும்போது அவள் துன்புறுவாளோ, அவளுடைய பாதங்கள் வெப்பத்தினைத் தாங்குமோ என எண்ணி வருந்துவதனை,

**"பாவை அன்னஎன் ஆய்தொடி மடந்தை**
**சென்றனள் என்றீர் !, ஐயர்**
**ஒன்றின வோ, அவள் அஞ்சிலம்பு அடியே!"**
***(ஐங்குறுநூறு.389:1-3)***

எனும் அடிகள் உணர்த்துகின்றது. திருமணத்திற்குப் பின் தலைவனும் தலைவியும் தங்கள் குழந்தையுடன் அன்போடு வாழ்வதைக் கண்ட செவிலி, அவளின் சிறந்த இல்லற நிலையினை நற்றாயிடம் பெருமிதத்துடன் உரைக்கும் நிலையினையும் ஐங்குறுநூற்றில் காண இயலுகின்றது.

**"மறிஇடைப் படுத்த மான்பிணை போல**
**புதல்வன் நடுவணன் ஆக, நன்றும்**
**இனிது மன்ற அவர் கிடக்கை"**

எனும் அடிகள் சான்றாக அமைகின்றன. அவ்வாறே குறுந்தொகையும்,

**"இனிது எனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"**
***(குறுந்தொகை.167:5-6)***

என நற்றாயிடம் தலைவியின் இல்லறம் குறித்து செவிலி உரைப்பதனை எடுத்துரைப்பதாய்அமைந்துள்ளது. இவையாவும் தலைவி இன்பத்துடன் வாழ்வதிலேயே தன்னுடைய மகிழ்வினைக் காணும் செவிலியின் அன்பு நிலையினை வெளிப்படுத்துவதாய் அமைகின்றது.

### தலைவியின் நிலை

தமிழர் பாரம்பரியத்தில் பெண்கள் முக்கியத்துவம் பெறுவதனைப்போல், சங்க அக இலக்கியங்களில் தலைவியே முதன்மை பங்கு வகிக்கின்றாள். தலைவன், தோழி, செவிலி, நற்றாய் குறித்த அகப்பாடல்கள் கூடத் தலைவியை மையப்படுத்தி அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய பெருமைமிக்க தலைவியானவள், நாணம் மிகுந்தவளாகவும் தலைவன் மீது மிகுந்த அன்புமிக்கவளாகவும் படைக்கப்பட்டுள்ளாள். சங்கப் பாடல்களில் தலைவியின்கூற்றுகளில்பல, அவளின்இன்ப நிலையினைவிட, தலைவன் விரைவில் வரைந்து கொள்ளாமை, ஊராரின் அலர், தலைவனின் பிரிவுத்துயரம், பரத்தையற் பிரிவு போன்ற துன்பநிலைகளை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளன.

தலைவியின் வாழ்வானது, தலைவனின் செயல்பாடுகளோடு பின்னிப்பிணைந்தாக உள்ளது.

பொருள் தேடிச் செல்லும் தலைவன், தனக்கென அதிகமான நகையும் பொருளும் கொண்டு வரவேண்டுமென எண்ணுவதனைவிட, தலைவன் தன்னுடன் இருப்பதனையும், அன்பு காட்டுவதனையுமே தலைவி விரும்புகின்றாள். தன் கண்கள் அழுமாறு நிலையில்லாத பொருளைத் தேடி தலைவன் சென்றதனை,

**"கல்இதழ் உண்கண் அழப்பிரிந் தோரே"**
***(ஐங்குறுநூறு.334:4)***

**"நின்றதுஇல் பொருட்பிணி முற்றிய**
**என்றூழ் நீடிய சுரன்இறந் தோரே"**
***(ஐங்குறுநூறு.336:3-4)***

என உணர்த்தும் தலைவியின் வாக்கானது, தலைவன் உடன் இருப்பதைவிடச் சிறந்த பொருள் எதுவும் இல்லை என்பதை உணர்த்துவதாய் அமைந்துள்ளது. அவ்வாறே, கலித்தொகையில் தலைவியைப் பிரிந்து செல்லும் தலைவனிடம் தோழி, தலைவியே பெரிதும் விரும்பும் பொருள் என்றும், அவளைப் பிரிந்து சென்று ஈட்டுவது உண்மையான பொருளாகாது என எடுத்துரைப்பதனை,

**"கல்இறந்து செயல் சூழ்ந்த பொருள்**
**பொருள் ஆகுமோ**
**வடமீன் போல் தொழுது ஏத்த வயங்கிய**
**கற்பினாள்**
**தடமென் தோள் பிரியாமை பொருளாயின்**
**அல்லதை"**
***(கலித்தொகை.2:20-22)***

எனும் கலித்தொகைப் பாடல் உரைப்பது ஈண்டு எண்ணத்தக்கது.

இத்தகைய பண்புடைய தலைவியிடம் தலைவன் அன்பு செலுத்தினாலும், அவ்வன்பானது தலைவிக்கு மட்டுமே உரியதாக இல்லை என்பதே வருந்ததக்கதாக உள்ளது. திருமணத்திற்கு முன்பு தன்னுடைய முழு அன்பினையும் தலைவியிடம் காட்டும் தலைவன், திருமணத்திற்குப் பின் பரத்தையரிடம் பழகுவது அக்காலச் சமூகத்தில் இயல்பானதாக இருந்தமையினைச் சங்கப் பாடல்களில் காணமுடிகின்றது.

"பரத்தையர் ஒழுக்கம் பழந்தமிழ் மக்களால் கடியப்படவில்லை என்றே தோன்றுகிறது. போர் நிகழ்ச்சிகள் மிக்க சங்க காலத் தமிழகத்தில் மகளிர் தொகை மிகுதியானதால் பரத்தையர் வாழ்வு பெற்றனரோ எனவும் கருத வேண்டியுள்ளது" என்று ஈ.கோ.பாஸ்கரதாஸ் கூறுகின்றார்.

பெண்ணுக்குரிய சிறந்த பண்புகளைக் கொண்டு திகழும் தலைவிக்கு அளிக்க வேண்டிய சிறப்பினைப் பொதுமகளிருக்கு அளித்து அன்பு காட்டுவதனைத் தாங்க முடியாமல் தலைவி வருந்துவதனை,

**"துறைகேழ் ஊரன்' கொடுமை நன்றும்**
**ஆற்றுக தில்ல, யாமே**
**தோற்க தில்லஎன் தடமென் தோளே"**

***(ஐங்குறுநூறு.12:2-4)***

எனும் அடிகள் வெளிப்படுத்துகின்றன. தலைவன் பரத்தையர்களுடன் சேர்ந்து இன்புற்றிருக்கும்போதும், அவனை வெறுத்து ஒதுக்காத தலைவி, தான் பெறவேண்டிய தலைவனின் அன்பினைப் பரத்தையர்கள் பெறுவதனையும், இனிப் பரத்தையர்களிடம் செல்லமாட்டேன் எனச் சூளுரைத்த தலைவன், தானுரைத்த வாக்கிலிருந்து தவறியதனையும் எண்ணி வருந்தி,

**"கடன்அன்று என்னும் கொல்லோ நம்ஊர்**
**முடம்முதிர் மருதத்துப் பெருந்துறை**
**உடன்ஆடு ஆயமொடு உற்ற சூளே?"**

***(ஐங்குறுநூறு.31:2-4)***

எனத் தோழியிடம் உரைக்கின்றாள் தலைவி.

தலைவன் கொண்ட பரத்தமை ஒழுக்கமானது, தலைவியால் தடுக்க இயலாததாக இருந்தாலும், தலைவி அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அவனைக் கடிந்தும், இல்லத்தில் சேர்க்காமலும் ஊடல் கொள்ளும் தலைவி, அவனது ஒழுக்கத்தினைத் தவறு என வலியுறுத்தியவாறே வாழ்கின்றாள். தலைவனின் தவறான ஒழுக்கத்தினைத் தலைவி அறிந்தால், அவள் பெருங்கோபம் கொள்வாள் என அறிவுறுத்துகின்றாள் தோழி.

**"செவியிற் கேட்பினும் சொல்இறந்து வெகுள்வோள்**
**கண்ணிற் காணின் என்ஆ குவன்கொல்.**
**பலர்படிந்து உண்ணும் நின் பரத்தை மார்பே?"**

***(ஐங்குறுநூறு.84:1-5)***

எனத் தோழி உரைப்பதன்மூலம், தலைவியின் மனநிலையினை அறிய முடிகின்றது.

பல ஆண்களுடன் வாழும் பெண்களுக்குப் பரத்தை எனப் பெயரிடும் சமூகம், பலப் பெண்களிடம் செல்லும் ஆண்களுக்கு எந்தவொரு பெயரும் சுட்டுவதில்லை. ஆனால் வள்ளுவரோ ஆண்களையும் "பரத்த" எனக் கூறுவதனை,

**"பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்**
**நண்ணேன் பரத்தநின் மார்பு"**

***(குறள்.1311)***

எனும் அடியில் காணமுடிகின்றது. தலைவனின் அழகினைப் பலப் பெண்களும் காண்பதனால் தலைவன் பரத்தையாகி விட்டான் எனத் தலைவி ஊடல் கொள்வதன் மூலம் ஆண்களுக்கும் கற்பு உண்டு என நிலைநிறுத்துகின்றார் வள்ளுவர்.

தலைவன் தான் செய்த தவறுக்குத் தலைவி ஊடல் கொள்ளும்போது, அவள்

முன் நின்று பேசத் தயங்குகின்றான். அவ்வுடலைத் தணித்து தலைவி தன்னை ஏற்றுக்கொள்ளும் வகையில் வாயில்கள் மூலம் தலைவியைச் சமாதானம் செய்கின்றான். தான் செய்தது சரி என்றோ, அது குறித்து தலைவி பேசக் கூடாது என்றோ தலைவன் வாதிடாமல் அவளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பவனாய், பொறுமை காத்து நிற்கின்றான்.

நற்றிணையில் தலைவன், தம் இல்லத்திற்கு விருந்தினர் வந்தால் தலைவி சினம் தணிந்து புன்னகை செய்வாள் என்பதற்காக விருந்தினர் வரவேண்டுமென விரும்புவதனை,

> **"எமக்கே வருகதில் விருந்தே! சிவப்பு ஆன்று,**
> **சிறியமுள் எயிறு தோன்ற**
> **முறுவல் கொண்ட முகம்காண் கம்மே"**
> **(நற்றிணை.120:10-12)**

என உரைக்கும் நற்றிணை வரிகள் தலைவியின் இல்லற மாண்பிற்கும் விருந்து உபசரித்தலுக்கும் சான்றாக அமைகின்றது.

தலைவி தன்னைக் கடிந்துகொண்டாலும், ஊடல் கொண்டு பேசுவதைத் தவிர்த்தாலும் தலைவன் அதனை எதிர்க்காமல், அவளைச் சமாதானம் செய்யவே முனைகின்றான். தலைவியிடமே அதிக அன்பு செலுத்து பவனாய் தலைவன் வாழ்வதனையும், அதற்குத் தலைவியின் நற்பண்பே காரணமாக அமைவதனையும்

> **"வண்டு தாது ஊதும் ஊரன்**
> **பெண்டுஎன விரும்பின்று அவள்தன் பண்பே"**
> **(ஐங்குறுநூறு.89:3-4)**

எனும் ஐங்குறுநூற்றுப் பாடல் தெளிவுபடுத்துகின்றது. இதன் மூலம் ஆண்கள் பெண்களின் வார்த்தைக்கு முக்கியத்துவம் அளித்து வாழ்ந்துள்ளதனை அறிய முடிகின்றது.

## முடிவுரை

சங்க அகப் பாடல்களில் தலைவன் தலைவிக்கு அடுத்ததாக முதன்மை பெறுபவள் தோழியே ஆவாள். தோழிக்கும் செவிலிக்கும் தனியானதொரு களவு வாழ்க்கையோ இல்லற வாழ்க்கையோ குறிப்பிடப்படவில்லை. தலைவியின் நலன் மீது அக்கறைக்கொண்டவளாகத் தோழியும், தலைவியைத் தன் மகளாக வளர்த்து அவளின் நல்வாழ்வில் மகிழ்ச்சி காணும் செவிலியையுமே சங்க இலக்கியத்தில் காணமுடிகின்றது. இவர்கள் இருவரது வாழ்வும் தலைவியை மையப்படுத்தியதாய் அமைந்துள்ளது. தலைவியின் உடன்பிறப்பு போல விளங்கும் தோழி, அவளின் களவு வாழ்க்கை முதல் இல்லற வாழ்க்கை வரை அவளின் நலனும் இல்லறமும் சிறக்க உயிர்ப்பாதியாய் விளங்குகின்றாள். தலைவியானவள்தலைவனின்அன்பிலேயே தன் வாழ்நாள் முழுவதனையும் அர்ப்பணித்து, அவனை அரவனைப்பது மட்டுமின்றி, அவன் செய்யும் தவறுகளுக்கு உடன்படாமல் அவனை இடித்துரைத்து வழிநடத்துகின்றாள். சங்க காலச் சமூகம் பெண்களுக்கும் அவர்களின் வாக்கிற்கும் மதிப்பளிக்கும் சமூகமாய் இருந்தமையினையும், அதற்குப் பெண்களின் கற்புடைமையும் நற்பண்பும் ஒழுக்கமும் காரணமாக இருந்தமையினையும் ஐங்குறுநூறு வழி அறிய முடிகின்றது.

## துணைநூற்பட்டியல்

1. சங்க இலக்கியங்கள் (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு) மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை.
2. திருக்குறள், பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.
3. அகப்பொருள் பாடல்களில் தலைவி, ஈ.கோ.பாஸ்கரதாஸ், tamilwriterscooperative, thirunelveli,india.
4. தொல்காப்பியம்-பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை, 2006.